(86) KN:D | F Spare 349

# தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

பொதுப்பணிகள் – கல்வித் தகுதிகள் – தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பை இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். பட்டப் படிப்பிற்கு இணையாக அங்கீகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (கூட்டுறவு தணிக்கை) த்துறை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் — 15 அக் 2003 — 16.10.2003 — சென்னை-600 002

அரசாணை (நிலை) எண். 409 28356

நாள் 06.10.2003
புரட்டாசி – 19, சுபானு
திருவள்ளுவர் ஆண்டு 2034

படிக்கப்பட்டவை:

1. அரசாணை நிலை எண். 281, நிதி (கூத) நாள் 08.08.2002.
2. கூட்டுறவு தணிக்கை இயக்குநரின் கடித எண். ந.க. 2031/2002/நேஉ3 நாள் 12.11.2002.
3. தேர்வாணைய கடித எண். 4416/ஆர்.என்.டி.-எஃப 1/2002/நாள் 15.07.2003.

3Gen. 81-83

**ஆணை :-**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பை (BACHELOR OF BANK MANAGEMENT) இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம் (BACHELOR OF COMMERCE) பட்டப் படிப்பிற்கு இணையான கல்வித் தகுதியாக கருதலாம் என ஆணை வெளியிடப்பட்டது.

2. இரண்டாவது படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.பி.எம். (BACHELOR OF BANK MANAGEMENT) பட்டப்படிப்பு என்பதற்கு பதிலாக "தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் / நிறுவனங்கள் ஆகியவற்றால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பினை இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். (BACHELOR OF COMMERCE) பட்டப்படிப்பிற்கு இணையாகக் கருதி ஆணை வெளியிடுமாறு கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அரசிடம் கோரி கருத்துரு அனுப்பியுள்ளார்.

3) சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பு என்பதற்குப் பதிலாக "தமிழ் நாட்டிலுள்ள பல்கலை கழகங்கள்/நிறுவனங்கள் ஆகியவற்றால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பை பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையாக அங்கீகரிப்பதற்கு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அரசாணை நிலை எண். 441, (பணி–ஆர்) நாள் 20.12.1993ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட கல்வித் தகுதி இணை அங்கீகரிப்பு குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அந்தக் குழுவும் 03.07.2003 அன்று நடந்த குழு கூட்டத்தில் "தமிழ் நாட்டிலுள்ள பல்கலைகழகங்கள்/நிறுவனங்களால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பை இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையாக கருதலாம்" என்று தேர்வாணையத்தின் பரிந்துரைக்குழு பார்வை 3ல் கண்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலனைக்குப்பின் ஏற்றுக்கொண்டு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் ஆகியவற்றால் வழங்கப்படும் பி.பி.எம். பட்டப்படிப்பை இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளில் ஒன்றான பி.காம். பட்டப்படிப்பிற்கு இணையான கல்வித் தகுதியாக கருதலாம் என ஆணையிடுகிறது.

5) இது குறித்து தற்காலிக விதிகளில் தகுந்த விதி திருத்தம் வெளியிட பிரேரணை தனியாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவு தணிக்கை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இல. கிருட்டிணன்,
அரசு சிறப்புச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை 600 005.

நகல்: செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 2.
பதிவாளர், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை
(ஆர்&இ) துறை, சென்னை 9
கூட்டுறவு உணவு மற்றும் பாதுகாப்புத் துறை, சென்னை 600 009
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை-600 010.
(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம் x x
பிரிவு அலுவலர்.

[signature]
பிரிவு அலுவலர்